1994 ஏப்ரல் 4]

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் அதைச் சொல்லிவிட்டுப் பேசினால், அதற்கு நானும் பதில் சொல்லலாம்; பேரவை முன்னவரும் பதில் சொல்லலாம். நீங்கள் என்னிடத்தில் எதுவும் சொல்லாமலே வந்து பேசக்கூடாது. இன்னொரு பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னீர்கள்; அது, நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இளம்வழுதி நீங்கள் என்னை வந்து பார்த்தீர்கள், அது நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லி, அதை அனுமதித்திருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு)

4. கவன ஈர்ப்பு

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, இராமா நதி அணை வெள்ளத்தினால் மணல் மேடிட்டிருப்பதை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். முருகையா பாண்டியன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர் முருகையா பாண்டியன். (குறுக்கீடு).

திரு ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அம்பாசமுத்திரம் தொகுதி, இராமா நதி அணையில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால், மணல் மேடிட்டிருப்பதை அப்புறப்படுத்துவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை" மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

3. தகவல் கோரல்-தொடர்ச்சி

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து--தொடர்ச்சி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமுகமான ஒரு முடிவு வருவதற்கு, நீங்கள் ஒரு யோசனை செய்ய வேண்டுமென்றுதான்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் அதுகுறித்துச் சொல்லிவிட்டு இங்கே வந்து பேசவேண்டும். என்னிடம் அறையிலே வந்து இதைப்பற்றிப் பேச வேண்டுமென்று கேட்டு, என்னுடைய அனுமதியை அங்கே பெற்றுவிட்டு, இங்கே வந்து பேசவேண்டும். (குறுக்கீடு) இங்கே வந்து அவ்வாறு பேசுவது முறையல்ல. அதிலேதான் விவகாரமே வந்தது. (குறுக்கீடு) இல்லை; நீங்கள் பேசுவது மாதிரி, அன்றைக்குப் பேசியதால்தான் விவகாரமே வந்தது. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களை உட்காருங்கள் என்று நான் சொல்கிறேன் அல்லவா? உட்காருங்கள் (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் நானும் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்; அதை என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். அவை முடிந்தவுடன் என்னுடைய அறைக்கு வாருங்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபரிசீலனை செய்து, அவர்களும் இந்த விவாதத்தில் வந்து பங்கேற்க வேண்டுமென்றுதான் தங்களை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி இராம நதி அணை வெள்ளத்தினால் மணல் மேடிட்டிருப்பதை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து--தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை

சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் மட்டுமின்றி சென்ற நவம்பர் 1992ல் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் இராமா நதி அணை மட்டுமின்றி இம்மாவட்டதில் உள்ள பெரும்பாலான அணைகளிலும் மண் மேடிட்டுள்ளது. இவ்வாறு படிந்துள்ள மண்ணின் அளவு, மற்றும் நீர்த்தேக்கங்களின் தற்போதைய கொள்ளளவுகளை அறியும் பொருட்டு தேவையான ஆய்வை அரசின் அனுமதி பெற்று மேற்கொள்ள பூண்டி நீரியல் மற்றும் நீர் நிலையியல் இயக்குநர், தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் கோரப்பட்டுள்ளார். ஆய்வுப் பணிகள் முடிந்ததும் தேவையிருப்பின் தேவையான நிதி ஒதுக்கீடு பெற்று மேற்படி அவைகளில் படிந்துள்ள மண்ணை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். முருகையா பாண்டியன் (குறுக்கீடு)

3. தகவல் கோரல்--தொடர்ச்சி

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து--தொடர்ச்சி

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான மானியக் கோரிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ள இருக்கிறோம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லியும், அவர் உட்காராமலேயே அதே பிரச்சினையைக் கிளப்பி, அன்று ஏற்பட்ட அதே சூழ்நிலையை ஏற்படுத்த அவர் விரும்புகிறாரா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் ஏற்கனவே சொல்லி விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை அவருக்குச் சொல்லி விட்டேன்; அதை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்; அதற்குப்

TRUTH ALONE TRIUMPHS

பிறகு நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன்; அப்போது வந்து இங்கே பேசுங்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நல்ல சூழ்நிலையை இப்போது நீங்கள் கெடுக்க நினைக்கிறீர்கள். நல்ல சூழ்நிலையில்தான் இப்போது அவை நடந்து கொண்டிருக்கிறது, நீங்கள் உட்காரவும். திரு. ஆர். முருகையா பாண்டியன். (குறுக்கீடு) நான் இவ்வளவு சொல்லிய பிறகும், நீங்கள் உட்காரவில்லை என்றால், அது முறையல்ல. உட்காருங்கள்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி, உட்காருங்கள். (குறுக்கீடு).

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு) **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். முருகையா பாண்டியன், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். அது சரியல்ல; அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உங்களைக் கேள்வி கேட்கத்தான் நான் அனுமதித்திருக்கிறேன். அது முறையல்ல. (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் அது முறையல்ல என்று சொல்லிவிட்டேனே? அது முறையல்ல என்று சொன்னதும், அவர் உட்கார்ந்து விட்டார். நீங்கள் செய்வது முறையல்ல என்று சொன்னவுடன், நீங்களும் உட்கார்ந்துவிடுங்கள். (குறுக்கீடு) அந்த மாதிரியெல்லாம் பேசக்கூடாது. உட்காருங்கள்.

4 கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முருகையா பாண்டியன்.

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி இராமா நதி அணை வெள்ளத்தினால் மணல் மேடிட்டிருப்பதை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் குறித்து--தொடர்ச்சி.

** **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.**

1994 ஏப்ரல் 4]

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருந்த பதிலைப் படித்துப் பார்த்தேன். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1992-வது வருடமும், 1993-வது வருடமும் பெய்த கடுமழையின் காரணமாகவும், புயலின் காரணமாகவும், எங்கள் தொகுதியான அம்பாசமுத்திரம் தொகுதியில் அமைந்திருக்கிற, இராமா நதி அணையிலே பாதி அளவிற்கு மணலும், கற்களும் வந்து நிரம்பிவிட்டன. அதன்விளைவாக, நீர்ப்பிடிப்பு குறைந்திருக்கிறது. சென்ற வருடத்திலேயும், 1992-வது வருடத்திலேயும் பெய்த மழையின் காரணமாக, மணலும், கற்களும் அந்த 'டேம்'--இலே வந்து நிரம்பியதன் காரணமாக, அங்குள்ள 'ஷட்டர்'கள் பழையபடி எடுக்க முடியாமல் இருந்தன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே, நாங்கள் வேண்டுகோள் விடுத்ததன் காரணமாக, தொழில்நுட்ப வல்லுநர்களை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் மூலமாக, மாற்று ஏற்பாடு செய்து, அந்த 'டேம்'--இல் உள்ள 'ஷட்டர்'களில் ஓட்டையைப் போட்டு, அங்கே இருக்கிற விவசாயிகளைப் பாதுகாத்தோம். ஆனாலும்கூட, இப்போது 'டேம்'--இலே இருக்கக்கூடிய மணலையும் கற்களையும் பார்த்து, அங்குள்ள விவசாயிகள் எல்லாம், அந்த அணையிலே தண்ணீர் பிடிப்பு அதிகமாக இல்லையே; எப்படி நம்மை அந்த நிலைமையிலிருந்து காப்பாற்ற முடியுமோ என்ற பெரிய பீதி அடைந்திருக்கிறார்கள். எனவே, அங்கேயிருக்கிற மணலை அப்புறப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேலும், அந்த மணலுக்கு உள்ளே பல விலையுயர்ந்த மரங்கள் புதைந்து கிடப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அந்த மணலை அப்புறப்படுத்தி, அங்குள்ள விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும். அங்குள்ள விவசாயிகள் இன்னொரு கருத்தையும் சொல்கின்றார்கள். இந்த மணலை அப்புறப்படுத்த அரசாங்கத்திற்குப் பணம் செலவாகும் என்று நினைத்தால் நாங்களே அந்த மணலை அப்புறப்படுத்தி விடுகிறோம், அரசாங்கம் உத்தரவிட்டால் என்று சொல்கிறார்கள். தேவையான அளவுக்கு அங்கே மணலை அப்புறப்படுத்துவதன் காரணமாக அணையில் மணல் எல்லாம் வெளியேறி விடும். அதன் பிறகு நல்ல திருப்பம் ஏற்படும் என்று விவசாயிகள் சொல்கிறார்கள். மேலும் ....

முற்பகல் 11.20.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். உங்களைப் பேச அழைக்கவில்லை.

[*1994 ஏப்ரல் 4*

திரு. ஆர். முருகையா பாண்டியன்: *பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விதான். மேலும், சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறியாளரைக் கேட்டபோது, அந்த டேமில் இப்போது 40% மணலும், கற்களும் வந்து நிரம்பிவிட்டன. அவைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று கூடச் சொன்னார்கள். மேலும், இந்த அணை தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட அணை. இப்போது, அங்கே நீர்ப்பிடிப்பு இல்லாமல் அணையிலிருந்து கசிவுநீர் வெளியிலே வந்து கொண்டிருக்கிறது. அதனால் அணையிலே தண்ணீரையும் தேக்கி வைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, மணலை அப்புறப்படுத்துவதற்கு மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக இராமாநதி அணையில் மட்டுமின்றி மற்ற அணைகளிலும்கூட, மணல் கற்கள், எல்லாம் வந்து மேடு ஆகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் ஆய்வு செய்வதற்காக பூண்டி நீரியல் மற்றும் நீர் நிலையியல் இயக்குநர் மற்றும் பூண்டி நீரியல் மற்றும் நீர் நிலையியலில் இருக்கிற தொழில்நுட்ப வல்லுநர்களை, நம்முடைய சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையினை ஏற்று, தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் அனுப்பி வைக்கக் கோரப்பட்டுள்ளார்கள். ஆகவே, அது போன்று இராமாநதி அணையிலும் ஆய்வு நடைபெற்றிருக்கிறது. அந்த ஆய்வுப் பணியினுடைய அறிக்கை வந்தவுடனே அது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

திரு. ஆர். முருகையா பாண்டியன்: *பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னதற்கு மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயப் பெருமக்களுடைய அவசியம் அறிந்து, இதை இந்த ஆண்டிலேயே அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: *பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அந்த அணையில் ஆய்வு*

நடைபெற்றிருக்கிறது, அந்த ஆய்வு அறிக்கை வந்தவுடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். விரைவிலே அந்த அறிக்கையினைப் பெற்று, தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பரமக்குடி நகர எல்லைக்குள் ஐந்து முனை சாலையில் அடிக்கடி விபத்து ஏற்படுவதால் வேகத்தடை வைக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேசிய நெடுஞ்சாலை--49--ல் பரமக்குடி நகர எல்லைக்குள் ஐந்து முனை சாலையில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஆவதால் அங்கே வேகத்தடை அமைக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ், அஜெண்டாவிலே இருப்பதைத்தான் தாங்கள் படிக்க வேண்டும். உயிர்சேதம் ஏற்படுவது பற்றி அதிலே இல்லை. நீங்களாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. அடிக்கடி விபத்து ஏற்படுவதால் வேகத்தடை வைக்க வேண்டிய அவசியம் குறித்து என்றுதான் சொல்லவேண்டும். (குறுக்கீடு) அஜெண்டாவில் இருப்பதைத்தான் படிக்க வேணடும். அமைச்சர் கொடுத்துள்ள அறிக்கையில் இருப்பதைப் படிக்கக் கூடாது.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :